எல்லாம் சென்ற காலத்தில் ஒற்றிவைக்கப்பட்டிருந்தது. அல்லது அவை மெதுவாக வசூலிக்கப்படவேண்டும் என்ற முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்திருந்தது.

ஆனால், சமீபத்தில் இப்போது இரண்டு வார காலமாக ஜப்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு பழைய கடன் பாக்கிக்காக விவசாயிகளின் பம்ப்செட்சை ஜப்தி செய்வது, மாடுகளை ஜப்தி செய்வது என்று பல கிராமங்களில் நெருக்கடியான ஒரு நிலையை உண்டுபண்ணியிருப்பது மட்டுமல்லாமல் வேளாண்மை உற்பத்திக்கும் அதனால் இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு கிராமத்தில் ராமசாமி என்பவர் வீட்டிலிருந்து பால் மாட்டை ஜப்தி செய்திருக்கிறார்கள். அதன் கன்று வீட்டில் இருக்கிறது அதுகூட இரண்டு மூன்று நாட்களில் இறந்துவிடும் நிலையில் இருக்கிறது. என்று கடிதம்கூட எழுதியிருக்கிறார். ஐந்து விவசாயிகளை பழைய பாக்கிக்காகத் தண்ணீர் இறைக்க விடாமல், விவசாயம் செய்ய விடாமல் தடுத்திருக்கிறார்கள். எழும்புவனம் என்ற இடத்தில் காளிமுத்து செட்டியார் இறைவை இறைத்துக்கொண்டிருக்கும்போது அவர் மாடுகளை ஜப்தி செய்துகொண்டு போய்விட்டார்கள். அவருக்குள்ளதே ஒரு ஜோடி மாடு. போர்ட் ஸ்டான்டிங் ஆடர்படி ஒரு ஜோடி உழவு மாடு வைத்திருந்தால் அப்படி ஜப்தி செய்யக்கூடாது என்று இருக்கிறது. அவர் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போதே ஜப்தி செய்துகொண்டு போயிருக்கிறார்கள்.

இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பலயிடங்களில் மார்ச் மாதம் சில தொகை கட்டியிருக்கிறார்கள். ஆனால் பூராத் தொகையையும் கட்ட வேண்டுமென்று ஜப்தி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு பூராவிலும், வரட்சிப் பகுதிகளில் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை யெல்லாம் , நிறுத்தி வைக்கப்பட்ட தொகை பூராவும் இப்போதே செலுத்தியாகவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கோவில்பட்டி தாலுகாவில் இந்த ஆண்டு ஓரளவிற்கு மழை பெய்திருந்தாலும் கைக்கு வரவேண்டிய மகசூல் இன்னும் வந்து சேரவில்லை. ஆனால் பாக்கித் தொகை பூராவையும் கட்டிவிட வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். ஏற்கெனவே இதுபற்றி நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அந்த நடவடிக்கைகளை நிறுத்துவதாக இல்லை. அரசாங்கம் வசூலிக்கச் சொல்லுகிறது என்று கெடுபிடி செய்து வசூலிக்கிறார்கள். தோட்டங்களில் சென்டா நட்டுவிட்டால் தண்ணீர் இறைக்க முடியாது. அந்த நிலையில் கால் பங்குகூட மகசூல் வராது. தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போது பம்ப்செட்டை ஜப்தி செய்துவிட்டால், மாடுகளை ஜப்தி செய்துவிட்டால் கையிலுள்ள காசு பூராவையும் புன்செய்யில் கொட்டி வரக்கூடிய வருமானம் அறவே போய்விடும் நிலைமை உள்ளது. அதனால் வேளாண்மை வளர்ச்சியும் பாதிக்கப்படும். விவசாயிகளும் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாவார்கள். கொடுவட்டியில் கடன் கொடுத்துள்ள லேவாதேவிக்காரர்கள்கூட மகசூல் வந்து விற்கக்கூடிய சமயத்தில்தான் போவார்கள். அப்படியிருக்க அதி